**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : CC.No. 111/2021**

**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.சுந்தரபாண்டியன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஐ.எஸ்.ஆர்.பாண்டியன் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | பாளையங்கோட்டை | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 22nd, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு மூட்டு பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.07.2019 அன்று அதிகாலை சுமார் 2 மணியளவில் கடையநல்லூர் மாவடிக்காலைச் சேர்ந்த கண்ணன் என்பவரின் மனைவி திருமதி.சரண்யா என்பவர் திருநெல்வேலி அரசு மருத்துவனையில் சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு முதலுதவி சிகிச்சை தென்காசி அரசு மருத்துவமனையில் அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). அவரது வலது உள்ளங்கையில் 10 cm அளவில் தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.

(2). அவரது வலது கை பெருவிரல் அருகே 3 செ.மீ அளவில் தையலிடப்பட்ட காயம் காணப்பட்டது.

தையல்கள் பிரிக்கப்பட்டு, காயங்களை பரிசோதித்ததில் 5வது விரலில் உள்ள Proximal Phalanx எலும்பு முறிவு ஏற்பட்டு, அந்த காயத்தில் தென்பட்டது.

அவருடைய வலது கை 4வது விரலில் MCP மூட்டு பிளவுப்பட்டு, சரிந்து காணப்பட்டது.

அவருடைய வலது கையின் 4வது மற்றும் 5வது விரல்களுக்கான FDS மற்றும் FDP தசை நரம்புகள் வெட்டப்பட்டு காணப்பட்டன.

அவருக்கு வலது கைக்கு எக்ஸ்–ரே எடுத்து பார்த்ததில் 5வது விரலுக்கான Proximal Phalanx எலும்பு முறிவு உறுதி செய்யப்பட்டது.

அவருக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, 4வது மற்றும் 5வது விரல்களுக்கு கம்பி போட்டு எலும்புகள் பொருத்தப்பட்டன.

FDS மற்றும் FDP தசை நரம்புகள் தைக்கப்பட்டன.

அவர், சிகிச்சை முடிந்து 03.08.2019 அன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். நான் வழங்கிய சிகிச்சையின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் தான். சரண்யாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறிப்புகள் அ.சா.ஆ.5 ஆகும். அவருடைய கேஸ் சீட் நான் எடுத்து வந்துள்ளேன். அது சா.சா.ஆ.1 ஆகும். அவருடைய எலும்பு முறிவை காண்பிக்கும் எக்ஸ்–ரே புகைப்படம் சா.சா.ஆ.2 ஆகும். அரிவாளால் தாக்கப்படும் போது, மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காயம்பட்ட நபர், ஒரு மாதம் சிகிச்சை எடுத்து கொண்டதாக சிகிச்சை குறிப்புகளை பார்த்தால் துலங்காது என்றால் சரிதான். காயத்தின் தன்மை குறித்து ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது கேட்டாரா? என்றால் கேட்டார். காயம்பட்டவருக்கு நான் கொடுத்த மருந்துகள் பொறுத்து கேஸ்

சீட்டில் துலங்கும். எக்ஸ்-ரே எத்தனை மணிக்கு எடுக்கப்பட்டது என்றால் கேஸ் சீட்டில் 23.07.2019 அதிகாலை 02.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் மேலே குறிப்பிட்ட அனைத்து காயங்களையும் குறித்து போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலீசார் என்னிடம் ஆயுதத்தை காண்பித்து கருத்துரு பெறவில்லை என்றால் சரிதான். வேகமாக செல்லக்கூடிய இருசக்கரவாகனத்தில் பின்னால் அமர்ந்து செல்லும் போது, கீழே விழுந்து கையை கீழே ஊனும் போது இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.23 16:59:03 +0530